## கிரிபாவ பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

---------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 26 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 25 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிரிபாவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் செயற்பாடுகளும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------------

1.3.1 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 02 கணக்கு விடயங்களில் மீதிகள் மற்றும் அவற்றோடு தொடர்புடைய துணைப்பதிவேட்டு மீதிகளிடையே ரூபா 35,844 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 64,714,391 ஆகும். அவற்றில் வைப்புக்கள் என இரண்டு வருடங்களை மிகைத்த காலம் முதல் காணப்படும் ரூபா 39,500 இற்கான 03 வைப்புக்களின் மீதிகள் காணப்பட்டது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------

தேவையான தகவல்களைக் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 979,307 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவான பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

1.3.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

1988 பிரதேச சபை(நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் விதி இலக்கம் 218 இன் பிரகாரம் சபையின் காணிகள் மற்றும் கட்டடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

2 நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 1,396,022 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 130,582 ஆக காணப்பட்டமையால் செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 1,526,602 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. இந்த செயற்பாட்டு விளைவிற்கு ரூபா 25,527,544 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 22,604,361 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டு தொடர்பான நிதி விளைவு ரூபா 4,319,205 இற்கான மிகை ஒன்றாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 26,386,733 தொகையில் மொத்தமாக நூற்றிற்கு 80 தொகை என ரூபா 21,042,779 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினை அடக்கியுள்ளது. மூலதன வருமானமாகிய ரூபா 25,527,544 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணத்தினை அடக்கியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவு ஆகிய ரூபா 24,990,711 தொகையில் அண்மித்த நூற்றிற்கு 73 என ரூபா 18,186,482 தொகை தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவிடப்பட்டிருந்தததுடன் அவற்றில் அண்மித்த நூற்றிற்கு 92 என ரூபா 16,777,427 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைக்கப்பெற்று ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதே போல் மூலதனச் செலவு ஆகிய ரூபா 22,604,361 தொகையில் அண்மித்த நூற்றிற்கு 1 ஆகிய ரூபா 263,899 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தததுடன் மீதியான நூற்றிற்கு 99 ஆகிய ரூபா 23,340,462 இற்கான தொகை கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களை அடக்கியுள்ளது.

2.3 வருமான நிருவாகம்

-------------------------------

வாடகை

-------------

சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் வாடகைக்கு கொடுத்தலின் கீழ் 2014 ஆண்டிற்காக குறைந்த விலைகூறல் கூட்டுத்தொகை ரூபா 324,854 ஆக காணப்பட்ட வாராந்த சந்தை 03 இறைச்சிக் கடைகள் மற்றும் 01 மீன் கடை என்பன வாடகைக்கு கொடுப்பதற்கு முடியாதிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் சொத்துக்கள் வாடகைக்குக் கொடுப்பது தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 117,882 இற்கான நிலுவை வருமானம் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் வழக்கு தொடர்பாக தொடர் செயல் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையால் மீளாய்வாண்டு இறுதி வரையும் அந்த வழக்கு செயற்பாட்டு நிலைமையில் காணப்படவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான 11 வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ஒரு வாகனத்தின் எரிபொருள் பரிசோதனை 02 வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதே போல் சபைக்கு சொந்தமான 04 வாகனங்களை பதிவு செய்து வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல் மற்றும் காப்புறுதி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(இ) சபையினால் 2013 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்ட கொங்கிரீட் அச்சு கற்கள் செயற்திட்டம் செயற்பாடு நிலையில் காணப்படவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக் கூற்றுக்களில் நடைமுறை சொத்துக்களின் கீழ் காணப்படும் ரூபா 1,266,033 தொகை பெறுமதியான 08 சொத்துக்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

(ஆ) 252-6357 இலக்கம் கொண்ட கப் வண்டி 2013 ஆண்டு முதல் 05 சந்தர்ப்பங்களில் ரூபா 1,049,750 தொகை ஒன்று செலவிடப்பட்டு திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அவ் வாகனம் ஓட்டநிலையில் காணப்படவில்லை.

3.3 தாமதமாகிய செயற்திட்டங்கள்

-----------------------------------------------

மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்காக திட்டமிட்டிருந்த மதிப்பீட்டு கிரயம் ரூபா 5,400,000 இனை கொண்ட 41 செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்